ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2103/2 - 2018 දෙසැම්බර් මස 24 වැනි සඳුදා - 2018.12.24

*2103/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை நில அளவையாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.02.27 ஆந்திகதிய மற்றும் 1434/5 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2005.08.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை நில அளவையாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நில அளவையாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2018, திசெம்பர் 21.

1. **நடைமுறைக்கு வரும் திகதி** :

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு 2018.12.24 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

2. **நியமன அதிகாரி தொடர்பான விபரங்கள்**

2.1 நியமன அதிகாரி : நில அளவையாளர் நாயக பதவிக்கான நியமன அதிகாரி அமைச்சரவை ஆவதுடன் நில அளவையாளர் நாயக பதவி தவிர்ந்த சேவையிலுள்ள ஏனைய பதவிகளுக்கான நியமன அதிகாரி அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகும்.

3. **சேவை வகுதி தொடர்பான விபரங்கள்**

3.1 சேவை வகைகள் : சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம்
நிறைவேற்றுத் தரம்

1A - G 29139 — 09 (2018/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3.2 தரங்கள் :

சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் விஷேட தரம்

நிறைவேற்றுத் தரம் I
நிறைவேற்றுத் தரம் II
நிறைவேற்றுத் தரம் III

3.3 ஒப்படைக்கப்படும் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பான பொது வரைவிலக்கணம் :

நில அளவைத் திணைக்களத்தின் தலைவர் என்ற வகையில் நில அளவையாளர் நாயகத்திடம் 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவை சட்டம் மற்றும் ஏனைய இடைநேர்விளைவான சட்ட விதிகளின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அவரிடம் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப்படும் நில அளவை விடயத்திற்கு ஏற்புடைய ஏனைய பணிகள் என்பன இந்த சேவையிலுள்ள பதவிகளை வகிப்பவர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**4. பதவியின் தன்மை : நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் உரித்துடையது.**

(அரசினால் எதிர்வரும் காலத்தில் ஓய்வூதிய முறை தொடர்பாக மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றிற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.)

**5. சம்பளங்கள்**

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் - சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் - SL-03-2016
நிறைவேற்றுத் தரம் - SL-01-2016

5.2 சம்பள அளவுத்திட்டம் - சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் - SL-03-2016
ரூபா 88,000 - 12 x 2700 - 120,400

நிறைவேற்றுத் தரம் - SL-01-2016
ரூபா 47,615 - 10 x 1335 - 8 x 1630 - 17 x 2170 - 110,895

5.3 சேவை வகுதிக்கு உரிய தரப்படுத்தல் முறை மற்றும் தரப்படுத்தல் முறைக்கு உரிய மாதாந்த சம்பளப் படிமுறைகள்

| தரம் | ஆரம்பச் சம்பளப் படிமுறை | சம்பளப் படிநிலை |
|---|---|---|
| தரம் III | படிமுறை 01 SL -1 - 2016 | ரூபா 47,615 |
| தரம் II | படிமுறை 12 SL -1 - 2016 | ரூபா 62,595 |
| தரம் I | படிமுறை 20 SL -1 - 2016 | ரூபா 76,175 |
| விஷேட தரம் | படிமுறை 01 SL -3 - 2016 | ரூபா 88,000 |

**6. சேவை வகுதிக்குரிய பதவிகள்**

6.1 அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றிற்கு ஒப்படைக்கப்படும் பணிகள் :

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் (தரம்) | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| நில அளவையாளர் நாயகம் (விஷேட தரம்) | 1 | நில அளவைச் சட்டம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சட்டவிதிகளின் மூலம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகள் மற்றும் நில அளவையாளர் நாயகத்திடம் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப் பட்டுள்ள ஏற்புடைய ஏனைய கடமைகளை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |

(தொடர்ச்சி)

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் (தரம்) | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| மேலதிக நில அளவையாளர் நாயகம் (விஷேட தரம்) | 3 | நில அளவைச் சட்டம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சட்டவிதிகளின் மூலம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகள் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப் படும் ஏற்புடைய ஏனைய கடமைகளை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் (விஷேட தரம்) | 5 | |
| பிரதி நில அளவையாளர் நாயகம் /மாகாண நில அளவையாளர் நாயகம் (விஷேட தரம்) | 15 | |
| சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (தரம் I) | 60 | நில அளவைச் சட்டம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சட்டவிதிகளின் மூலம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகள் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப் படும் ஏற்புடைய ஏனைய கடமைகளை நிறைவேற்றல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| நில அளவை அத்தியட்சகர் (தரம் II) | 139 | நில அளவைச் சட்டம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சட்டவிதிகளின் மூலம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகள் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப் படும் ஏற்புடைய ஏனைய கடமைகளை நிறைவேற்றல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| உதவி நில அளவை அத்தியட்சகர்/ நில அளவையாளர் (தரம் III) | 850 | நில அளவைச் சட்டம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சட்டவிதிகளின் மூலம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகள் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப் படும் ஏற்புடைய ஏனைய கடமைகளை நிறைவேற்றல் |

6.2 இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை : 1049
ஒரு தரத்திலிருந்து மற்றைய தரத்திற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக தரம் III, II மற்றும் I ஆகிய சகல தரங்களும் இணைந்த பதவிகளின் எண்ணிக்கைக்கு உரித்தானதாகக் கருதப்படும்.

**7. ஆட்சேர்ப்பு முறை**

இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பாக நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவியில் பணி புரியும், 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்திற்கு அமைய நில அளவைகள் சபையில் பதிவு செய்துள்ள நில அளவையாளர் ஒருவராகிய கீழே குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களில் இருந்து தரம் III இற்கான சகல ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படும்.

(i) நில அளவையியல் பட்டம் ஒன்றுடன் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவராயின், ஆறு (06) மாத கால திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி ஒன்றுடன் நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருட காலம் முனைப்பாக மற்றும் திருப்திகரமாக பணி புரிந்து இருத்தல்.

(ii) நில அளவையியல் பட்டம் அல்லாத வேறு ஒரு பட்டத்துடன் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவராயின், நில அளவையியல் பட்டம் ஒன்றினைப் பூர்த்தி செய்தல் மற்றும் அதன் பின்னர் நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருட காலம் முனைப்பாக மற்றும் திருப்திகரமாக பணி புரிதல்.

இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை (அ) பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*8.* **வினைத்திறன் காண் தடை தாண்டல்கள்**

*8.1*

| எந்த வினைத்திறன் காண் தடை தாண்டல் என்பது தொடர்பாக | வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருடங்களுக்கு முன்னர் | வினைத்திறன் காண் தடை தாண்டலின் தன்மை எழுத்து மூலப் பரீட்சை / தொழில் சார் பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / ஏனையவை |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெற்று மூன்று (03) வருடங்கள் கழியும் முன்னர் | "ஆ" பின்னிணைப்பினைப் பார்க்கவும் |
| 2 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் கழியும் முன்னர் | "ஆ" பின்னிணைப்பினைப் பார்க்கவும் |
| 3 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் கழியும் முன்னர் | "ஆ" பின்னிணைப்பினைப் பார்க்கவும் |

*8.2* வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்படுவது எவ்வளவு காலப்பகுதிக்கு ஒரு முறை : வருடத்தில் இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

*8.3* வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளுக்கு உரிய பரீட்சைகளை நடாத்தும் அதிகாரிகள் யாவர்:

1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அமைச்சுச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும்.

3 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை, **"ஆ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தினால் அல்லது** அமைச்சுச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும்.

9. **மொழித் தேர்ச்சி :**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 01. அரச கரும மொழிகள் தேர்ச்சி | இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக, அரச கரும மொழி அல்லாத வேறு ஒரு மொழி மூலம் அரசாங்க சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவர் பயிலுநர் காலப் பகுதியில் ஒரு அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 02. ஏனைய அரச கரும மொழி | இலங்கை நில அளவையாளர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவர், அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் 5 வருடங்களுக்குள் 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றுநிருபத்திற்கு அமைய III ஆவது வகைக்குரிய மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 03. இணைப்பு மொழி | இலங்கை நில அளவையாளர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவர், அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் 5 வருடங்களுக்குள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியினைப் பாடம் ஒன்றாக சித்தியடைந்து இருத்தல் (விருப்பத்திற்குரிய பாடம் ஒன்றாக அல்ல) அல்லது நில அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் ஆங்கில மொழி தொடர்பாக நடாத்தப்படும் விஷேட பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் ஆகிய தகைமை ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

10. **தரம் உயர்த்துதல்**

10.1 தரம் III இலிருந்து தரம் II க்கு தரமுயர்த்துதல்.

10.1.1 பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :

I. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல்.

II. சேவை வகுதியின் தரம் III இல் ஆகக் குறைந்தது பத்து (10) வருட கால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பத்து (10) சம்பள ஏற்றங்களை ஈட்டிக் கொண்டிருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு அமைய தரமுயர்த்தும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலும் உயர்வான செயலாற்றுகை ஒன்றினை வெளிக்காட்டி இருத்தல்.

IV. தரமுயர்த்தும் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

V. உரிய மட்டத்திற்குரிய மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொண்டிருத்தல்.

VI. உரிய வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்து இருத்தல்.

10.1.2 தரமுயர்த்தும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய நியமன அதிகாரியிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைக்கும் போது, நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தரம் II இற்கு தரமுயர்த்துதல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

*10.2* II **ஆம் தரத்திலிருந்து** I **ஆம் தரத்திற்கு தரமுயர்த்துதல்**

*10.2.1.* பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :

I. தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் திகதியன்று தரம் II இல் ஏழு (07) வருட கால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஏழு (07) சம்பள ஏற்றங்களை ஈட்டிக் கொண்டிருத்தல்.

II. சேவைக்குரிய இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல்.

III. தரமுயர்த்தும் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு அமைய தரமுயர்த்தும் தினத்திற்கு முன்னரான ஏழு (07) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலும் உயர்வான செயலாற்றுகை மட்டம் ஒன்றினை ஈட்டிக் கொண்டிருத்தல்.

V. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து/ நிறுவனம் ஒன்றிலிருந்து நில அளவையியல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நில அளவையியல் துறைக்கு உரிய விடயப் பரப்பு ஒன்றில் அல்லது காணி நிருவாகம் தொடர்பான பட்டப் பின் படிப்பு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

*10.2.2* தரமுயர்த்தும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களினால் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய நியமன அதிகாரியிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைக்கும் போது, நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையினைக் கருத்திற் கொள்ளாது சேவையின் தரம் I இற்கு தரமுயர்த்துதல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

*10.3* I **ஆம் தரத்திலிருந்து விஷேட தரத்திற்கு தரமுயர்த்துதல்**

*10.3.1* பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் :

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து/நிறுவனம் ஒன்றிலிருந்து நில அளவையியல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நில அளவையியல் துறைக்கு உரிய விடயப் பரப்பு ஒன்றில் அல்லது காணி நிருவாகம் தொடர்பான பட்டப் பின் படிப்பு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

II. தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் திகதியன்று நிறைவேற்றுத்தரச் சேவை வகுதியின் முதலாவது தரத்தில் ஐந்து (05) வருட கால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் நிறைவேற்றுத்தரச் சேவை வகுதியின் முதலாவது தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை ஈட்டிக் கொண்டிருத்தல்

III. தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் திகதியன்று இலங்கை நில அளவையாளர் சேவையின் நிறைவேற்றுத்தரச் சேவை வகுதியில் 18 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது அதிலும் உயர்வான மட்டத்தில் இருத்தல்.

V. தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனை ஒன்றிற்கு உட்படாது இருத்தல்.

*10.3.2 தரமுயர்த்தும் முறை :*

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களுள் சேவையின் தரம் I இன் சேவைமுப்பு ஒழுங்கு முறைக்கேற்ப சேவையின் விஷேட தரத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் சேவையின் விஷேட தரத்திற்கு தரமுயர்த்துதல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**11. பதவிகளுக்கு நியமித்தல்**

*11.1 தகைமைகள்*

| பதவி | தகைமைகள் |
|---|---|
| நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |
| மேலதிக நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |
| சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |
| பிரதி நில அளவையாளர் நாயகம் / மாகாண நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |
| சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இல் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |
| நில அளவை அத்தியட்சகர் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இல் அல்லது தரம் II இல் உள்ள அலுவலர் ஒருவராக இருத்தல். |

*11.2 தெரிவு செய்யப்படும் முறை :*

| பதவி | தகைமைகள் |
|---|---|
| நில அளவையாளர் நாயகம் | அமைச்சரவையினால் நியமிக்கப்படுவார். |
| மேலதிக நில அளவையாளர் நாயகம் | நில அளவையாளர் நாயகம் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அடுத்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப மேலதிக நில அளவையாளர் நாயக பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும். |

(தொடர்ச்சி)

| பதவி | தகைமைகள் |
|---|---|
| சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் | நில அளவையாளர் நாயகம் மற்றும் மேலதிக நில அளவையாளர் நாயகங்கள் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் உள்ள அடுத்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயக பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். |
| பிரதி நில அளவையாளர் நாயகம் / மாகாண நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்களுள் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி நில அளவையாளர் நாயகம் / மாகாண நில அளவையாளர் நாயகம் ஆகிய பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். |
| சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | நில அளவை அத்தியட்சகர் பதவியினை வகிக்கும் இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இல் உள்ள அலுவலர்களுள் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். (பதவிக்கு நியமிக்கும் போது பதிற்கடமை மேற்கொள்ளல்/கடமையினை நிறைவேற்றல் நியமனம் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) |
| நில அளவை அத்தியட்சகர் | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இல் அல்லது தரம் II இல் உள்ள அடுத்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப நில அளவை அத்தியட்சகர் பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் |

**12. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்படும் பொது நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் :**

(அ) கட்டாய சேவைக்காலம்

நில அளவையியல் பட்டம் ஒன்றுடன் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள், நில அளவையாளர் ஒருவராக நியமனம் பெறும் தினம் தொடக்கம் ஆறு (06) வருட கட்டாய சேவைக் காலம் ஒன்றிற்கும், ஏனைய பட்டம் ஒன்றுடன் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் நில அளவையாளர் ஒருவராக நியமனம் பெறும் தினம் தொடக்கம் எட்டு (08) வருட கட்டாய சேவைக் காலம் ஒன்றிற்கும், உட்படுவர். பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக நியமனம் பெறும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் நில அளவையாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட வேண்டியதுடன் கட்டாய சேவைக் காலத்திற்கு முன்னர் நீங்கிச் செல்லும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) சேவை ஆரம்பப் பயிற்சி :

(i) இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பாக நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படும் நில அளவையியல் பட்டதாரிகளுக்கு திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி ஒன்று வழங்கப்படும்.

(ii) இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பாக நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படும் நில அளவையியல் பட்டதாரிகள் அல்லாத ஏனைய பட்டங்களைக் கொண்ட உத்தியோகத்தர்கள், அவர்களது இரண்டாவது பட்டமாக நில அளவையியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டப் பாடநெறி ஒன்றினை நில அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி ஒன்றும் வழங்கப்படும்.

(இ) சேவைக் காலப் பயிற்சி :

சேவைக் காலப் பயிற்சிப் பாடநெறியின் மூலம் அலுவலர்களுக்கு தொழில் சார் அறிவு தொடர்ச்சியாக வழங்கப்படும். சேவையிலுள்ள சகல அலுவலர்களினதும் தொழில்சார் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் மேற்படி பயிற்சிப் பாடநெறியின் மூலம் வழங்கப்படும்.

***13. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் கோடல்களுக்கு புறம்பான பொருள்கோடல்கள் :***

(i) "வர்த்தமானப் பத்திரிகை" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை எனப் பொருள்படும்.

(ii) "சேவை" என்பது இலங்கை நில அளவையாளர் சேவை எனப் பொருள்படும்.

(iii) "சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பது இலங்கை நில அளவையாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

(iv) "அமைச்சுச் செயலாளர்" என்பது நில அளவையாளர் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

(v) "நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம்" என்பது 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள நில அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் எனப் பொருள்படும்.

(vi) "2005.08.01 பிரமாணக் குறிப்பு" என்பது 2005.08.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.02.27 ஆந்திகதிய மற்றும் 1434/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நில அளவையாளர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எனப் பொருள்படும்.

(vii) "முனைப்பான சேவைக் காலம்" என்பது சம்பளமற்ற லீவுக் காலப் பகுதிகள் உள்ளடக்கப்படாத ஆயினும் அமைச்சரவையினால் கொள்கை அடிப்படையில் முனைப்பான சேவைக்காலமாக கருதப்பட வேண்டமென விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக் காலங்களையும் உள்ளடக்கிய உத்தியோகத்தரொருவர் தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு கடமையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியாகும்.

(viii) இலங்கை நில அளவையாளர் சேவையானது, இந்த பிரமாணக் குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ள ("இ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள) எந்தவொரு திணைக்களத்திலும் மேற்படி சேவையில் மேலே குறிப்பிடப்பட்டு உள்ள வகுப்புகளுக்கோ அல்லது தரங்களுக்கோ நியமிக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களை உள்ளடக்கி இருக்கும்.

***14. வெற்றிட எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை என்பவற்றினைத் தீர்மானித்தல்***

உதவி நில அளவை அத்தியட்சகர்/ நில அளவையாளர் பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் இருந்து, மேற்படி பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையினதும் இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவியில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையினதும் மொத்த எண்ணிக்கையினைக் கழிப்பதன் மூலம் இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்குரிய வெற்றிட எண்ணிக்கை கணிக்கப்படும். ஆட்சேர்ப்பிற்காக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையாக கருதப்படுவது மேற்படி ஆண்டின் யூன் 30 ஆந்திகதியன்று நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகும்.

இங்கு உதவி நில அளவை அத்தியட்சகர், நில அளவையாளர், இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் ஆகிய பதவிகளில் சேவையில் ஈடுபட்டு உள்ள அலுவலர்களின் எண்ணிக்கை உதவி நில அளவை அத்தியட்சகர்/ நில அளவையாளர் பதவிகளுக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையினை விஞ்சுதல் கூடாது.

**15. சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் உறுதிப்படுத்தல் மற்றும் தரப்படுதப்பட்ட பதவியுயர்வுகளை மேற்கொள்ளல்**

(அ) இலங்கை நில அளவையாளர் சேவைக்கான புதிதாக ஆட்சேர்ப்பு தரம் III இற்காக மாத்திரமே மேற்கொள்ளப்படுவதுடன் தரப்படுத்தல் செய்யப்பட்ட பதவியுயர்வுகள் இந்த பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறையின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) 12 ஆவது அத்தியாயத்திற்கு அமைய அவர்கள் பயிலுநர் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல், அரசகரும மொழியல்லாத வேறு ஒரு மொழி மூலம் இணைத்துக்கொள்ளப்படும் பயிலுநர் நில அளவையாளர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் அரச கரும மொழி ஒன்றில் உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக தனது கடமை நடவடிக்கைகள் மற்றும் நடத்தை என்பவற்றை திருப்திகரமான மட்டத்தில் பேணி வந்து பூர்த்தி செய்திருப்பின் மற்றும் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 7 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

**16. ஓய்வு பெறும் மாற்றுவழி**

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினமாகும்போது சேவையில் உள்ள, சுய விருப்பு ஓய்வூதியம் பெறும் வயதினை அடைந்திராத அலுவலர் ஒருவருக்கு ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 7 ஆவது பிரிவின் கீழ் ஓய்வு பெறும் விருப்பத்தினைத் தெரிவிக்கும் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டிய அளவிற்கு மேற்படி பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளினால் பாதகமான பாதிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது என அரசாங்க சேவை ஆணைக்குழு கருதுமிடத்து இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினம் தொடக்கம் ஐந்து (05) வருடங்களுக்குள் மேற்படி விருப்பத் தெரிவினை பயன்படுத்துவதற்கு உட்பட்ட வகையில் அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் கோரிக்கை ஒன்றினை முன்வைக்குமிடத்து அவ்வாறு ஓய்வு பெறுவதற்கு இடமளிக்கப்படும்.

**17. சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் மீளமைக்கப்பட்ட சேவையின் புதிய தரப்படுத்தல் முறைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்**

இந்த நடைமுறை, அமுலுக்கு வரும் திகதியன்று சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். உரிய தினத்தன்று 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றுநிருபம் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றுநிருபங்களின் மூலம் வழங்கப்பட்டு உள்ள SL-01-2016 மற்றும் SL-03-2016 சம்பள அளவுத்திட்டங்களின் கீழ் சம்பளம் பெறும் சகல அலுவலர்களும் தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

அந்தந்த பதவிகளுக்கு நியமிக்கப்படும் திகதியினை அடிப்படையாகக் கொண்டு சேவைக் காலம் கணிப்பிடப்படும். எவ்வாறாறெனினும் உள்ளீர்ப்பு காரணமாக உரிய நபரின் சம்பள ஏற்றத் தினத்தில் மாற்றம் ஏதும் நிகழாது என்பதுடன் மேற்படி தினம் உள்ளீர்ப்பிற்கு முன்னர் நிலவிய சம்பள ஏற்றத் திகதியாக மாற்றமின்றி நடைமுறையில் இருத்தல் வேண்டும். அவ்வாறே சம்பள மாற்றத்தின் போது உரிய நபர் கடைசியாக பெற்று வந்த சம்பளப் படிமுறை புதிய சம்பளப் படிமுறைக்கு இணையொத்திருப்பதன் மீது தாபன விதிக் கோவையின் VII ஆவது அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவிற்கு அமைய அடுத்து வரும் மேல் சம்பளப் படிமுறையில் அமர்த்தலும் ஆகாது.

(i) சேவையின் தரம் III இற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.

சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று சேவையின் வகுப்பு II, தரம் II இல் உள்ள அலுவலர்கள் சேவையின் தரம் III இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) சேவையின் தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.

(அ) சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று சேவையின் வகுப்பு II, தரம் I இல் உள்ள அலுவலர்கள் சேவையின் தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(ஆ) சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.3 ஆம் பிரிவின் கீழ் வகுப்பு II இன் தரம் I இற்கு நியமனம் பெற்ற அலுவலர்கள் தரம் I இற்கு பதவியுயர்வு பெறும் உரிமை இன்றி தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(iii) சேவையின் தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.

சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்கள் சேவையின் தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

(iv) சேவையின் விஷேட தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.

சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று சேவையின் தெரிவு செய்யப்பட்ட வகுப்பில் உள்ள அலுவலர்கள் சேவையின் விஷேட தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

18. **இடைக்கால ஏற்பாடுகள் :**

"இடைக்காலமானது மேற்படி பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதி தொடக்கம் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு அமுலில் இருக்கும்.

18.1 இடைக் காலப்பகுதியில் மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2.1. இன் (V) அல்லது 10.3.1 இன் (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாற்றுவழித் தகைமைகளாக நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் நில அளவையியல் தொடர்பான உயர் டிப்ளோமாப் பாடநெறி அல்லது நில அளவையியல் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி அல்லது இதனை ஒத்த அல்லது அதிலும் உயர்வான நில அளவையியல் தொடர்பான பாடநெறி ஒன்றோ ஏற்றுக்கொள்ளப்படும்.

18.2 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பானது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினமாகும் போது 2006.02.27 ஆந் திகதிய மற்றும் 1434/5 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நில அளவையாளர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கு அமைய வகுப்பு I இல் ஐந்து (05) வருட முனைப்பான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள், 8.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள மூன்றாவது (3) வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையும் தேவைப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படுவர்.

18.3 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பானது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினமாகும் போது வகுப்பு I இற்கு பதவியுயர்வு பெற்றிருந்த போதிலும் வகுப்பு I இற்கு பதவியுயர்வு பெற்றதன் பின்னர் 05 வருட கால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்வதன் மூலம் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டிக்கொண்டிராத அலுவலர்களுக்கு மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்கு உரிய வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையினை சித்தியடைவதற்காக இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு வெளியிடப்படும் தினம் தொடக்கம் 05 வருட சலுகைக்காலம் ஒன்று வழங்கப்படும்.

18.4 2005.08.01 ஆந்திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 1 மற்றும் 2 என்பவற்றில் சித்தியடைந்ததாக கருதப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்தும் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழும் மேற்படி வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 1 மற்றும் 2 இல் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

18.5 2005.08.01 ஆந்திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.1 ஆம் பிரிவிற்கு அமைய சேவையின் வகுப்பு II/II இற்கு உள்ளீர்ப்பு செய்யத் தகைமை பெறாத சேவையின் III/I, III/II, III/III ஆம் வகுப்புகளில் பணி புரிந்த நில அளவையாளர்கள் இலங்கை நில அளவையாளர்கள் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்வதற்கான தகைமைகளைப் பெறும் வரை தற்போதைய வகுப்பில்/தரத்தில் இருத்தல் வேண்டும். அவர்கள் 2005.08.01 ஆந் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்வதன் மீது மேற்படி நிபந்தனைகளுக்கு அமைய சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும்.

*18.6 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களுக்கு தரம் I இற்கு பதவியுயர்வுகளை வழங்கும் போது இடைக் காலப்பகுதியில் ஏற்புடையதாகக் கொள்ள வேண்டியது 2006.02.27 ஆந்திகதிய மற்றும் 1434/5 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளாகும் என்பதுடன் அவை 2018.12.31 ஆந்திகதி வரை மாத்திரம் நடைமுறையில் இருக்கும்.*

*18.7 2005.08.01 ஆந்திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பாக நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இற்கு இணைத்துக் கொள்ளும் போது மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இணைத்துக் கொள்ளப்படுவர்.*

*18.8 2018.12.31 ஆந்திகதியின் பின்னர் மேற்படி பிரமாணக் குறிப்பின் கீழ் முதலாம் தரத்திற்கு பதவியுயர்வு பெறுவதற்காக தேவையான ஆகக் குறைந்த சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் வரை அதாவது 2022.08.01 ஆந்திகதி வரை வெற்றிடமாக்கப்படும் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் பதில் கடமை அடிப்படையில் அல்லது கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் அலுவலர்கள் நியமிக்கப்படுவர். மேற்படி பதில் கடமை நியமனமானது தரம் இரண்டில் உள்ள சேவை மூப்பின் அடிப்படையில் வழங்கப்படுவதுடன் எவரேனும் அலுவலர் ஒருவருக்கு மேற்படி பதில் கடமையினை மேற்கொள்ளும் / கடமைகளை நிறைவேற்றும் நியமனத்தினை வழங்கும் சந்தர்ப்பத்தில் பொறுப்பேற்காவிடின் இரண்டு வருடங்கள் கழியும் வரை மீண்டும் பதில் கடமை /கடமையினை நிறைவேற்றும் நியமனம் ஒன்றினை வழங்குவதற்காக பரிசீலிக்கப்படமாட்டாது.*

*(சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிக்கான நிரந்தர நியமனங்களை வழங்கும் போது பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றும் நியமனங்களில் கடமைகளை நிறைவேற்றும் அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிக்கான பதில் கடமை /கடமைகளை நிறைவேற்றும் நியமனங்களில் கடமைகளை நிறைவேற்றும் அலுவலர்களுக்கு சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் பதில் கடமை /கடமையினை நிறைவேற்றும் பதவிக்குரிய நியமனங்களில் கடமைகளை நிறைவேற்றாத அலுவலர்களுக்கு சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிக்குரிய நியமனம் வழங்கப்படும்.)*

### *19. அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் தேர்ச்சிகள்*

*இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையில் தேவைப்படும் தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் என்பவற்றையும் சகல அலுவலர்களும் உரிய வகையில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.*

### *20. சேவை மூப்பு*

*பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக இணைத்துக்கொள்ளப்படும் நில அளவையியல் பட்டதாரிகள் இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படும் போது அவர்களது சேவை மூப்பினைத் தீர்மானிக்கும் தேர்வு முறையானது பயிலுநர் நில அளவையாளர் சேவைக் காலத்தின் இறுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் “ஈ” பின்னிணைப்பின் பிரகாரம் நடாத்தப்படும் பரீட்சையில் அந்தந்த அலுவலர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் ஆகும்.*

*பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கான திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு (போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்) மற்றும் திறன் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு (நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில்) என்பன ஒரே நாளில் மேற்கொள்ளப்படும் போது திறன் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் சேவை மூப்பில் கூடியவர்களாகக் கருதப்படுவர்.*

### *21. ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள்*

*மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்குப் புறம்பான விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.*

## பின்னிணைப்பு "அ"

## இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் முறை

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமாகும் வகையில் இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

1. ஆட்சேர்ப்புச் சதவீதம்

| பிரிவு | சதவீதம் |
|---|---|
| திறந்த | 90% |
| திறமை | 10% |

**குறிப்பு :**

இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பின் போது இணைத்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையில் 90% ஆனவர்கள் உரிய தகைமைகளைக் கொண்ட பட்டதாரிகளில் இருந்து திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக இணைத்துக் கொள்ளப்படுவர் என்பதுடன் எஞ்சிய தொகையினை நில அளவைத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவி ஒன்றில் பணி புரியும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உரிய தகைமைகளைக்கொண்ட ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அலுவலர்களிலிருந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் திறமை அடிப்படையில் ஆட்சேர்க்கும் முறையின் கீழ் இணைத்துக்கொள்ளப்படுவர். ஆயினும், இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர்களாக பயிற்சிகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்வதற்கு போதியளவு எண்ணிக்கையிலான அலுவலர்கள் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் கீழ் இணைத்துக்கொள்ள இயலாதவிடத்து மேற்படி வெற்றிடங்களுக்காகவும் திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும்போது நில அளவையியல் பட்டதாரிகள் மற்றும் ஏனைய பட்டதாரிகள் 9:1 என்ற சதவிகிதத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர். நில அளவையியல் பட்டதாரிகள் தேவையான அளவு காணப்படாவிடின் மேற்படி தொகை ஏனைய பட்டதாரிகளில் இருந்து நிரப்பப்பட்டு ஏனைய பட்டதாரிகள் தேவையாள அளவில் காணப்படாவிடின் மேற்படி தொகை நில அளவையியல் பட்டதாரிகளிலிருந்து நிரப்பப்படுவர்.

### 2. திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

2.1 **தகைமைகள் :**

2.1.1 **கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து/ நிறுவனம் ஒன்றில் இருந்து

(i) நில அளவையியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினை அல்லது

(ii) விஞ்ஞானமாணி விஷேட பட்டம் ஒன்றினை (கணிதம் அல்லது பௌதீகவியல் அல்லது கணினி/ தகவல் தொழிநுட்பவியலை பிரதான பாடமாக) அல்லது

(iii) பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினை அல்லது

(iv) வகுப்பு சித்தி ஒன்றுடன் கணினி / தகவல் தொழிநுட்பவியல் பட்டம் ஒன்றினை அல்லது

(v) வகுப்பு சித்தி ஒன்றுடன் கணிதம் அல்லது பௌதீகவியல் பாடங்களுடன் சாதாரண விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க.பொ.த உயர் தரத்தில் கணிதம் மற்றும் பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

2.1.2 தொழில் சார் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் : ஏற்புடையதாகாது.

2.1.3 உடலியல் தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்காக சகல வகையிலும் பொருத்தமான உடலியற் தகைமையினைக் கொண்ட முப்பரிமாண பார்வையுடைய மற்றும் நிறக்குருடு இல்லாத நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

2.1.4 ஏனையவை :

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் ஓர் சமயத் துறையில் மதகுரு ஒருவராக பதவி வகிக்கும் நபர்கள் இந்தப் பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்பதுடன் அவ்வாறான நபர்களுக்கு இந்தப் பதவிகளுக்காக விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறே ஆட்சேர்ப்பிற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எந்தவொரு அனுமதியும் இல்லை.

(iv) சேவைக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தலில் மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தினமாக குறிப்பிடப்படும் தினத்தன்று மேற்படி பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே ஆகும். தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.1.5 வயது

2.1.5.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 22 வருடங்கள்

2.1.5.2 ஆகக் கூடிய வயதெல்லை : 28 வருடங்கள்

2.2 ஆட்சேர்ப்பு முறை :

பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது நில அளவையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்று சகல பாடங்களிலும் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகள், புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகைமைகள் மற்றும் பொதுவான உடலியற் தகைமைகள் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக நில அளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக இணைத்துக்கொள்ளப்படுவர். .

(அ) இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பான நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான விபரங்கள் :

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையானது, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்ற

முடியும் என்பதுடன் பரீட்சைக்காக விண்ணப்பித்த மொழி மூலத்தினை பின்னர் மாற்ற முடியாது. மேற்படி பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மூன்று பாடங்களுக்குரிய வினாப்பத்திரங்களை உள்ளடக்கி இருப்பதுடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மூன்று பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடையும் புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 2 | பொது விவேகம் | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 3 | பொது அறிவு | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**கிரகித்தல்** : இரண்டு (02) மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்ட மேற்படி வினாப்பத்திரத்தின் மூலம் சிறுசொற்றொடர்கள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். சில சொற்றொடர்கள் தனி வாக்கியத்தில் முன்வைப்பதற்காக வழங்கப்படும். கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கான விளக்கங்களை வழங்கும் வினாக்களும் வழங்கப்படும். இன்னும் சில சொற்றொடர்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடம் பல வித்தியாசமான கூற்றுக்கள் முன்வைக்கப்படுவதுடன், அதில் ஒன்று இந்த உரையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுடன் மிகவும் நன்றாகப் பொருந்தும். விண்ணப்பதாரிகள் இதிலிருந்து மிகவும் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்தல் வேண்டும். மேலும் சில சொற்றொடர்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகளிடம் சில வினாக்கள் முன்வைக்கப்படும். அதற்குப் பொருத்தமான விடைகளை அளித்தல் எதிர்பார்க்கப்படும். மேலும் இந்த வினாக்களைத் தயாரிப்பது விண்ணப்பதாரிகள் மேற்படி சொற்றொடர்களின் பொருளினை விளங்கிக் கொள்ளும் முறையினைப் பரீட்சிப்பதற்காகும். இதற்கு மேலதிகமாக சுருக்கம் எழுதுவதற்கான நீண்ட உரைப் பகுதி ஒன்றும் வழங்கப்படும்.

**பொது விவேகம்** : இரண்டு (02) மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்ட மேற்படி வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், அவரது சிந்தனைப் பகுப்பாய்வுத் திறன், தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்காக தயாரிக்கப்படும். மேற்படி வினாப்பத்திரம் பல்தேர்வு முறையினை ஒத்த வினாக்களை உள்ளடக்கி இருக்கும்.

**பொது அறிவு** : இரண்டு (02) மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்ட மேற்படி வினாப்பத்திரம் இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் சுற்றாடல் உட்பட சகல விடயங்களும் தொடர்பான மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறும் நவீன விடயங்கள் அவ்வாறே விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாகவும் உள்ள அறிவினைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பொது வினாத்தாள் ஒன்றாகும். பல வினாக்களில் இருந்து தான் விரும்பும் வினாக்களைத் தெரிவு செய்ய அனுமதி உண்டு.

2.3 விண்ணப்பங்கள் கோரும் முறை : இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலமும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலமும்

### 3. திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

#### 3.1 தகைமைகள் :

3.1.1 கல்வித் தகைமைகள் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து / நிறுவனம் ஒன்றிலிருந்து

(i) நில அளவையியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினை அல்லது

(ii) விஞ்ஞானமாணி விஷேட பட்டம் ஒன்றினை (கணிதம் அல்லது பௌதீகவியல் அல்லது கணினி/ தகவல் தொழிநுட்பவியலை பிரதான பாடமாக) அல்லது

(iii) பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினை அல்லது

(iv) வகுப்பு சித்தி ஒன்றுடன் கணினி/ தகவல் தொழில்நுட்பவியல் பட்டம் ஒன்றினை அல்லது

(v) வகுப்பு சித்தி ஒன்றுடன் கணிதம் அல்லது பௌதீகவியல் பாடங்களுடன் பொதுவான விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க.பொ.த உயர் தரத்தில் கணிதம் மற்றும் பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3.1.2 தொழில் சார் தகைமைகள் : ஏற்புடையதாகாது.

3.1.3 அனுபவம் :

நில அளவைத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவி ஒன்றில் பணி புரியும், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் மற்றும் ஐந்து வருடங்களுக்குக் குறையாத முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

3.1.4 உடலியற் தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்காக சகல வகையிலும் பொருத்தமான உடலியற் தகைமையினைக் கொண்ட முப்பரிமாண பார்வையுடைய மற்றும் நிறக்குருடு இல்லாத நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

3.1.5 ஏனையவை :

(i) உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஏதேனும் குற்றம் ஒன்று தொடர்பில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டாமல் இருத்தல்.

3.1.6 ஆகக் கூடிய வயதெல்லை : வயதெல்லை இல்லை

3.2 ஆட்சேர்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

3.2.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடையும் புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| செயலாற்றுகை (செயலாற்றுகை அறிக்கைக்கு ஏற்ப) 1. சேவைக் காலம் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். | ஏற்புடையதாகாது. |

3.2.1.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி : நில அளவையாளர் நாயகம் அவர்கள்

3.2.2 **பொதுவான நேர்முகப் பரீட்சை** (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் மேற்படி சந்தர்ப்பத்திலேயே பொதுவான நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

3.2.2.1 நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் :

பயிலுநர் நில அளவையாளர் ஒருவராக ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான தகைமைகள் மற்றும் வெளியிடப்படும் வர்த்மானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் என்பவற்றை உரிய விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்துள்ளனரா என்பதனைப் பரீட்சித்தல் மற்றும் பொதுவான உடலியற் தகைமைகளைப் பரீட்சித்தல்.

3.3 விண்ணப்பங்கள் கோரும் முறை : இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம் அல்லது திணைக்களச் சுற்றுநிருபங்களின் ஊடாக மற்றும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம்

3.4 பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு உரித்தான சம்பளப் பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டம்

MN-5-2016 ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460/-

**பின்னிணைப்பு "ஆ"**

**இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக்குறிப்பு - வினைத் திறன் காண் தடைதாண்டல்**

இலங்கை நில அளவையாளர் சேவையின் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகள் மூன்றாகும்.

**1 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் :**

சேவையின் தரம் III இற்காக இணைத்துக் கொள்ளப்படும் அலுவலர் ஒருவர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படும் தினம் தொடக்கம் 3 வருடங்கள் பூர்த்தியாகும் முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட பாடத் திட்டத்தின் கீழான எழுத்து மூலப் பரீட்சை ஒன்றாகிய முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு வினாப்பத்திரங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | திணைக்களத்தின் நில அளவை ஒழுங்குவிதிகள் மற்றும் நிலையான கட்டளைகள் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 2 | தாபன விதிக் கோவை, நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**1 திணைக்களத்தின் நில அளவை ஒழுங்குவிதிகள் மற்றும் நிலையான கட்டளைகள்**

திணைக்களத்தின் நில அளவை ஒழுங்குவிதிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், நிலையான கட்டளைகள், அரசாங்க கேள்வி அறிவித்தல் நடைமுறை ஒழுங்குவிதிகள் என்பன தொடர்பான ஒரு வினாத்தாள் ஆகும்.

**2. தாபன விதிக் கோவை, நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள்**

இது தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றின்இ கீழே குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கு உரிய விடயங்களின் அடிப்படையில் அமைந்த ஒரு வினாப்பத்திரம் ஆகும்.

(அ) நிதிப் பிரமாணங்கள் (X ஆம் அத்தியாயம் தவிர்ந்த)

(ஆ) தாபன விதிக் கோவையின் I, II, III, V, VI, VII, IX, XI, XXVIII, XXV, XXVI, XXVIII, XXIX, XXX, XXXI, XXXIII, XLVIII ஆம் அத்தியாயங்கள்

(இ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை ஒழுங்கு விதிகள் கோவை (திருத்தங்கள் உட்பட)

**2 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் :**

தரம் II இலுள்ள அலுவலர்கள் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு மூன்று (3) வருடங்கள் பூர்த்தி அடையும் முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட பாடத்திட்டத்தின் கீழான எழுத்து மூலப் பரீட்சை ஒன்றாகிய இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல்ப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு வினாப்பத்திரங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடையும் புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | காணிச் சட்டங்கள் மற்றும் காணிகளை நில அளவை செய்தல் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 2 | வெளிக்கள நில அளவை முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

(1) **காணிச் சட்டங்கள் மற்றும் காணிகளை நில அளவை செய்தல்** - காணிச் சட்டம், காணி நிருவாகம், நவீன நில அளவைத் தொழில்நுட்பம் மற்றும் வரைபட நில அளவைகள் என்பன தொடர்பான ஒரு வினாப்பத்திரம்.

(2) **வெளிக்கள நில அளவை முகாமைத்துவம்** - முகாமைத்துவம் மற்றும் அலுவலக மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தொடர்பான ஒரு வினாப்பத்திரம்.

**3 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டல் :**

தரம் I இலுள்ள அலுவலர்கள் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டு ஐந்து (5) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ய முன்னர் நில அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் அல்லது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் நில அளவையியல் அல்லது முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட அலுவலர்களுக்கான ஐந்து (5) குறுகிய காலப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

பின்ணிணைப்பு "இ"

இலங்கை நில அளவையாளர் சேவையானது, கீழே குறிப்பிடப்பட்டு உள்ள எந்தவொரு திணைக்களத்தினதும் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் உள்ள விஷேட மற்றும் III, II, I தரங்களுக்கு நியமிக்கப்பட்ட அரச அலுவலர்களை உள்ளடக்கி இருக்கும்.

1. நில அளவைத் திணைக்களம்

2. காணி ஆணையாளர் நாயக திணைக்களம்

3. புகையிரதத் திணைக்களம்

4. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்

பின்ணிணைப்பு "ஈ"

01. பரீட்சையின் பெயர் : இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் வழங்கப்படும் போது சேவை மூப்பினைத் தீர்மானிப்பதற்காக நடாத்தப்படும் பரீட்சை.

02. பரீட்சை தொடர்பான விபரங்கள் : இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் வழங்கப்படும் போது சேவை மூப்பினைத் தீர்மானிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள பாடப் பரப்புடனான எழுத்து மூலப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். உரிய பரீட்சார்த்திகள் மேற்படி 02 வினாத்தாள்களிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் சராசரியின் அடிப்படையில் சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

| | வினாத்தாளின் பெயர் | கால அளவு |
|---|---|---|
| 1 | செயன்முறை நில அளவை மற்றும் மட்டங்களை எடுத்தல் (Practical surveying \& Leveling) | 03 மணித்தியாலங்கள் |
| 2 | நில அளவையியல் தகவல் முகாமைத்துவம் (Survey Information Management) | 03 மணித்தியாலங்கள் |

03. பரீட்சையினை நடாத்தும் அதிகாரி : இலங்கை பரீட்சைத் திணைக்களம்

04. பரீட்சைக்கான பாடப் பரப்பு

01. செயன்முறை நில அளவை மற்றும் மட்டம் எடுத்தல்.

(i) நிலைக்குத்தான கிடையான கட்டுப்பாட்டு வலையமைப்பு பாவனை மற்றும் அமைவு.

(ii) நில அளவை செய்யும், மட்டம் எடுக்கும் உபகரணங்களின் பாவனை மற்றும் துல்லியமான மதிப்பிடுதல்.

(iii) நில அளவைகளை செய்வதற்கான மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம்.

(iv) பல்வேறு தரவு மூலங்களின் ஊடாக இட அமைவு /இட அமைவு சாராத தரவுகளைச் சேகரித்தல். (காணிகளின் விபரங்கள் மற்றும் அதன் துணையுடன் தேவைக்கு ஏற்ற வகையில் வரைபடங்கள் / இலக்கமிடப்பட்ட தரவுகளைத் தயாரித்தல்.)

(v) காணித் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் கட்டமைத்தல்

(vi) அரச /தனியார் காணிகளை அடையாளம் காணல்.

(vii) ஒவ்வொரு காணிகளுக்கும் உள்ள சட்ட வரையறையினை அடையாளம் காணல்.

(viii) புவியியல் பண்பு ரீதியான வரைபடங்களைத் தயாரித்தல்.

*02. நில அளவைத் தகவல் முகாமைத்துவம்*

(i) பல்வேறு நில அளவைக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான செயன்முறை அறிவு

(ii) நில அளவை அறிக்கைகளைத் தயாரித்தல் (நில அளவை குறிப்பேடு உள்ளிட்ட)

(iii) ஒதுக்குக் காடுகள் மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக நிலத்தினை ஒதுக்குவதற்குத் தேவையான அறிவு

(iv) தொடர்புடைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு

*01-166*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.